income
made yours

**இன்கம் இன்சூரன்ஸ் லிமிடெட்**
(நிறுவனப் பதிவு எண். 202135698W)
(சிங்கப்பூர்க் குடியரசில் ஒருங்கிணைக்கப்பட்டது)

# ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பு

இதன்வழி அறிவிக்கப்படுவதாவது, இன்கம் இன்சூரன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ("நிறுவனம்") ஆண்டுப் பொதுக்கூட்டம் திங்கட்கிழமை, 25 மே 2026, மாலை 5.30 மணிக்கு த ஸ்டார் தியேட்டர், த ஸ்டார் மேடைக்கலை நிலையம், 5வது மாடி, 1 விஸ்தா எக்ஸ்சேஞ்ச் கிரீன், சிங்கப்பூர் 138617 எனும் முகவரியில் பின்வரும் காரியப் பரிவர்த்தனைக்காக நடத்தப்படும்:

சாதாரண காரியங்களாக

1. 31 டிசம்பர் 2025 முடிவுற்ற நிதி ஆண்டுக்குரிய இயக்குநர்கள் அறிக்கை, தணிக்கையான நிதி அறிக்கைகள், மற்றும் அவை சார்ந்த தணிக்கையாளரின் அறிக்கை ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டு, ஏற்றுக் கொள்ளுதல். (தீர்மானம் 1)
2. 31 டிசம்பர் 2025 முடிவுற்ற நிதி ஆண்டுக்கு சாதாரண பங்கு ஒன்றுக்கு S$0.600 லாப ஈவை (ஒற்றைப்படி வரிவிலக்குபெற்றது) அறிவித்தல். (தீர்மானம் 2)
3. 31 டிசம்பர் 2025 முடிவுற்ற நிதி ஆண்டுக்கு சாதாரண பங்கு ஒன்றுக்கு S$0.463 சிறப்பு லாப ஈவை (ஒற்றைப்படி வரிவிலக்குபெற்றது) அறிவித்தல். (தீர்மானம் 3)
4. 31 டிசம்பர் 2026 முடிவுறும் நிதியாண்டுக்காக S$1,384,000 வரையிலான இயக்குநர்கள் கட்டணத்தை அங்கீகரித்தல். இது நிலுவைத் தொகையாகச் செலுத்தப்படும். (தீர்மானம் 4)
5. நிறுவனத்தின் தணிக்கையாளர்களாக KPMG LLP நிறுவனத்தை மீண்டும் நியமித்தல் மற்றும் அவர்களின் ஊதியத்தை நிர்ணயிக்க நிறுவன இயக்குநர்களுக்கு அதிகாரம் வழங்குதல். (தீர்மானம் 5)
6. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் முறையாகப் பரிவர்த்தனையாகக்கூடிய மற்ற ஏதேனும் சாதாரண காரியங்களைப் பரிவர்த்தனை செய்தல்.

நிறுவனச் சபையின் உத்தரவுப்படி

சோ ஃபோர்ம் போ
நிறுவனச் செயலாளர்

தேதி: 8 மே 2026

குறிப்புகள்:

1. இந்த ஆண்டுப் பொதுக்கூட்டம், திங்கட்கிழமை, 25 மே 2026, மாலை 5.30 மணிக்கு த ஸ்டார் தியேட்டர், த ஸ்டார் மேடைக்கலை நிலையம், 5வது மாடி, 1 விஸ்தா எக்ஸ்சேஞ்ச் கிரீன், சிங்கப்பூர் 138617 எனும் முகவரியில் முற்றிலும் நேரடியான முறையில் நடத்தப்படும். உறுப்பினர்கள் மெய்நிகராகக் கலந்துகொள்ள தெரிவுகள் கிடையாது.

   நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு ("**உறுப்பினர்கள்/உறுப்பினர்**") ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பு, பிரதிநிதி படிவம் ஆகியவற்றின் அச்சிடப்பட்ட நகல்கள் அனுப்பி வைக்கப்படாது. இந்தப் பத்திரங்களை நிறுவனத்தின் https://www.income.com.sg/agm இணையத்தளத்தில் வெளியிடுவதன்வழி மின்னியல் முறையில் உறுப்பினர்களுடன் பகிரப்படும்.

2. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் மற்றும்/அல்லது ஆண்டுப் பொதுக்கூட்ட ஒத்திவைப்பு அங்கத்தில் கலந்துகொள்ள உறுப்பினர்கள் மட்டுமே அழைக்கப்படுகின்றனர்.

3. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கத் தகுதிபெறும் ஓர் உறுப்பினர், தனது சார்பில் கலந்துகொண்டு வாக்களிக்க அதிகபட்சம் இரண்டு பிரதிநிதிகளை நியமிக்கலாம். பிரதிநிதி உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

4. ஓர் உறுப்பினர் ஒரு நிறுவனமாக இருந்தால், பிரதிநிதியை நியமிக்கும் படிவம், அடையாள முத்திரையுடன் அல்லது நிறுவன அதிகாரி அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட வழக்கறிஞர் கைப்படத் தயாரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும்.

5. பிரதிநிதியை அல்லது பிரதிநிதிகளை நியமிக்கும் படிவத்துடன், அதிலுள்ள கையொப்பத்தை உறுதிப்படுத்தும் சட்டபூர்வ அதிகாரப் பத்திரம் அல்லது வேறு அதிகாரப் பத்திரம் (பொருந்துமாயின்) அல்லது சான்றுறுதி அளிக்கப்பட்ட நகல், பின்வரும் முறையில் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்படவேண்டும்:
   (a) நேரடியாக அல்லது தபால்வழி சமர்ப்பிப்பதாக இருந்தால், 1 ஹார்பர்ஃபிரண்ட் அவென்யூ, #14-07 கெப்பல் பே டவர், சிங்கப்பூர் 098632 எனும் முகவரியில் அமைந்திருக்கும் போர்ட்ரூம் கார்ப்பரெட் அண்ட் அட்வைசரி சர்வீசஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனத்திலுள்ள நிறுவனப் பங்கு பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்படவேண்டும் அல்லது அனுப்பி வைக்கப்படவேண்டும்; அல்லது
   (b) மின்னஞ்சல் மூலம் மின்னியல் முறையில் சமர்ப்பிப்பதாக இருந்தால், போர்ட்ரூம் கார்ப்பரெட் அண்ட் அட்வைசரி சர்வீசஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனப் பதிவாளரின் srs.proxy@boardroomlimited.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்,

   எந்த முறையில் சமர்ப்பிப்பதாக இருந்தாலும், 22 மே 2026 மாலை 5.30 மணிக்குள் சமர்ப்பிக்கவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், பிரதிநிதி படிவம் செல்லுபடியாகாது.

**தனிப்பட்ட தரவுகளின் தனியுரிமை:**
தனிநபர் தரவை அணுகி திருத்தம் செய்தல், ஒப்புதலை மீட்டுக்கொள்ளுதல் உள்ளிட்ட தனிநபர் தரவுகளின் சேகரிப்பு, பயன்பாடு, வெளியீடு பற்றிய தகவலுக்கு நிறுவனத்தின் தனியுரிமை கொள்கையைப் (https://www.income.com.sg/privacy-policy) பார்க்கவும். நிறுவனத்தின் தனியுரிமை கொள்கை நிறுவனத்தால் திருத்தப்படலாம், துணைப்பகுதிகள் சேர்க்கப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளவும், பேசவும், வாக்களிக்கவும் பிரதிநிதிகளை நியமிக்கும் படிவத்தைச் சமர்ப்பிப்பதன்வழி, ஓர் உறுப்பினர்:

(i) நிறுவனம் (அல்லது அதன் முகவர்கள்), ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்காக நிறுவனம் (அல்லது அதன் முகவர்கள்) செயற்பாடுகளும் நிர்வாகமும் செய்வதற்காகவும், உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகளின் பட்டியலைத் தயாரித்துத் தொகுப்பதற்காகவும், பிரதிநிதிகளின் தனிநபர் தரவுகளைச் சேகரிக்கவும், பயன்படுத்தவும், வெளியிடவும் ஒப்புதல் அளிக்கிறார். நடப்பிலுள்ள சட்டங்கள், விதிமுறைகள் மற்றும்/அல்லது வழிகாட்டிகள் ஆகியவற்றிற்கு நிறுவனம் (அல்லது அதன் முகவர்கள்) உடன்படுவதற்காக, ஆண்டுப் பொதுக்கூட்டம் தொடர்பான விவரக்குறிப்புகளையும் மற்ற பத்திரங்களையும் ஆவணப்படுத்துதலும் இதில் உள்ளடங்கும் (மொத்தமாக, "நோக்கங்கள்"),

(ii) பிரதிநிதிகளின் தனிப்பட்ட தரவுகள் சேகரிக்கப்படும், பயன்படுத்தப்படும், நிறுவனத்தால்/ நிறுவனத்திடம் (அல்லது அதன் முகவர்களிடம்) வெளியிடப்படும் நிலையில், அதற்கான நோக்கங்களையும் நிறுவனத்தின் தனியுரிமை கொள்கையையும் பிரதிநிதிகளிடம் தெரியப்படுத்தி, முன்கூட்டியே அவர்களின் ஒப்புதலைப் பெற்றிருப்பதாக உறுப்பினர் உத்தரவாதம் அளிக்கிறார்,

(iii) நிறுவனத்தின் இணையத்தளத்திலும் நிறுவன வெளியீடுகளிலும் வெளியிடுவதற்காக ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் புகைப்படங்களும் காணொளிகளும் எடுப்பதற்கு ஒப்புதல் அளிக்கிறார். அதோடு, இதுபற்றி பிரதிநிதிகளிடம் தெரியப்படுத்தியிருப்பதாகவும், பிரதிநிதிகளிடம் முன்கூட்டியே ஒப்புதல் பெறப்பட்டிருப்பதாகவும் உறுப்பினர் உத்தரவாதம் அளிக்கிறார்; மற்றும்

(iv) மேற்காணும் நிபந்தனைகளை உறுப்பினர் மீறுவதால் எழக்கூடிய எந்தவொரு தண்டனைகள், பொறுப்புகள், கோரிக்கைகள், இழப்புகள், சேதங்கள் ஆகியவற்றிலிருந்து நிறுவனத்திற்கு இழப்பெதிர்காப்பு அளிக்க சம்மதிக்கிறார்.

**பதிவுகள் மற்றும் லாப ஈவு வழங்கீட்டுத் தேதிகள் குறித்த அறிவிப்பு**
வரிவிலக்குபெற்ற ஒற்றைப்படி லாப ஈவுகளுக்கு உறுப்பினர்கள் அங்கீகாரம் வழங்கினால், பரிந்துரைக்கப்படும் a) 31 டிசம்பர் 2025 முடிவுற்ற நிதி ஆண்டுக்கு சாதாரண பங்கு ஒன்றுக்கான S$[**0.600**] லாப ஈவு (ஒற்றைப்படி வரிவிலக்குபெற்றது) ("**பரிந்துரைக்கப்படும் லாப ஈவு**"); மற்றும் b) 31 டிசம்பர் 2025 முடிவுற்ற நிதி ஆண்டுக்கு சாதாரண பங்கு ஒன்றுக்கான S$[**0.463**] சிறப்பு லாப ஈவு (ஒற்றைப்படி வரிவிலக்குபெற்றது) ("**பரிந்துரைக்கப்படும் சிறப்பு லாப ஈவு**") ஆகியவற்றுக்கு உறுப்பினர்களின் தகுதிநிலையை நிர்ணயிப்பதற்காக, பங்கு மாற்ற ஏடுகளும் நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடும் 25 மே 2026 அன்று மாலை 5.00 மணிக்கு மூடப்படும் என்றும் இதன்வழி அறிவிக்கப்படுகிறது. 1 ஹார்பர்ஃபிரண்ட் அவென்யூ, #14-07 கெப்பல் பே டவர், சிங்கப்பூர் 098632 எனும் முகவரியில் அமைந்திருக்கும் போர்ட்ரூம் கார்ப்பரெட் அண்ட் அட்வைசரி சர்வீசஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனத்திலுள்ள நிறுவனப் பங்கு பதிவாளர் அலுவலகத்திற்கு 25 மே 2026, மாலை 5.00 மணி வரை கிடைக்கும் முறையாகப் பூர்த்திசெய்து முத்திரையிடப்பட்ட மாற்றுகள், பரிந்துரைக்கப்படும் லாப ஈவுக்கும் பரிந்துரைக்கப்படும் சிறப்பு லாப ஈவுக்கும் உறுப்பினரின் தகுதிநிலையை நிர்ணயிப்பதற்காகப் பதிவு செய்யப்படும். எதிர்வரும் 25 மே 2026 தேதி நடைபெறவிருக்கும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் அங்கீகரித்தால், பரிந்துரைக்கப்படும் லாப ஈவும் பரிந்துரைக்கப்படும் சிறப்பு லாப ஈவும் 12 ஜூன் 2026 அன்று செலுத்தப்படும்.